**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**OS.NO.414/2021** **தேதி.08.01.2025**

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி.துர்காதேவி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... வா.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2024 ம் ஆண்டு 08.01.2025 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | விஜயன் |
| த/பெ. | : | கண்ணன் |
| வயது | : | 64/2025 |
| தொழில் | : | விவசாயம் |
| இனம் | : | ஆண் |
| கிராமம் | : | புளியங்கண்ணு |
| வட்டம் | : | வாலாஜா |
| மாவட்டம் | : | இராணிப்பேட்டை |

**முதல் விசாரணை:–**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண வாக்குமூலத்தை என் தரப்பு சாட்சியாக பாவித்துக்கொள்ளும்படி பிராத்தித்துக்கொள்கிறேன். 14.09.2019 தேதியிட்ட பிரதிவாதி என் பெயருக்கு எழுதிகொடுத்த கடனுறுதி ஆவணம் அசல் வா.த.சா.ஆ.1 ஆகும். நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு 13.09.2021 அன்று ஒரு சட்ட அறிவிப்பை அனுப்பினேன் அந்த அறிவிப்பின் அலுவலக நகல் வா.த.சா.ஆ.2 ஆகும். மேற்படி அறிவிப்பை முதல் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.த.சா.ஆ.3 ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன். மேற்படி அறிவிப்பை 2 ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ள மறுத்து திருப்பி அனுப்பிய ஆவணம் வா.த.சா.ஆ.4 ஆகும். தாவாப்படி தீர்ப்பளிக்கும்படி பிரார்த்தித்துக்கொள்கிறேன்.
(கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).